**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 09.04.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்பு பற்றிய ஒருநாள் பயிற்சி

இந்திய பொருளாதாரத்தில் வேளாண்துறையின் பங்கு 18.30 விழுக்காடாக உள்ளது. வேளாண்மையில் அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் பயிர் மகசூலை அதிகரிக்கவும் மற்றும் தரத்தை மேம்படுத்தவும் தேனீக்கள் அவசியம். தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தின் மார்த்தாண்டம் பகுதியில் சுமார் 20,000 தேனீ வளர்ப்பாளர்கள் 2 லட்சம் இந்திய தேனீப்பெட்டிகளைப் பராமரித்து ஆண்டுக்கு 2500 டன்களுக்கும் அதிகமான தேனை உற்பத்தி செய்கின்றனர்.

மக்களிடையே தேனீக்கள் குறித்த விழிப்புணர்வு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, தேனீ வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இது தொடர்பாக **ஏப்ரல்** மாதத்திற்கான பயிற்சி, 07.04.2025 அன்று பத்து நபர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் முக்கிய அம்சங்களான தேனீ இனங்ளைக் கண்டுபிடித்து வளர்த்தல், பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம், தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்தச்சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம், தேனைப் பிரித்தெடுத்தல், மற்றும் தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம் குறித்து விரிவுரை வழங்கப்பட்டது. மேலும் இந்தியத் தேனீ, இத்தாலியத் தேனீ மற்றும் கொசுத் தேனீக் கூட்டங்களை கையாளும் முறை, தேனீப் பெட்டிகளை பராமரித்தல், பிரித்தல், இணைத்தல், தேன் பிரித்தெடுத்தல், மற்றும் கலப்படத் தேன் கண்டுபிடிக்கும் ஆய்வு குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இறுதியாக பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**